இராஜபகவதி

தமிழ் மாத இதழ்

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம்   வெளியீடு 3   ஸ்ரீ பராபவ வருடம் ஆனி 2026

MISSION VISION

ஸ்ரீ இராஜபகவதி சர்வசக்தி பீடம்

எமது தோற்றம்

அன்னை ஸ்ரீ இராஜபகவதியின் பேரருளாலும், குருபரம்பரையின் அனுக்கிரகத்தாலும், மகா கும்பமேளா மற்றும் மகா சிவராத்திரி புண்ணிய வேளையில், காசி க்ஷேத்திரத்தில் 26 பிப்ரவரி 2025 அன்று ஸ்ரீ இராஜபகவதி சர்வசக்தி பீடம் தெய்வீக சங்கல்பத்துடன் நிறுவப்பட்டது.

சனாதன தர்மம், ஸ்ரீவித்யா உபாசனை, வேத-ஆகம மரபுகள், ஆன்மீக விழிப்புணர்வு மற்றும் மனிதநேய சேவை ஆகியவற்றை உலக மக்களிடையே பரப்புவதே பீடத்தின் அடிப்படை நோக்கமாகும்.

தொலைநோக்கு பார்வை (VISION)

"தர்மம் நிலைத்து, ஆன்மீகம் மலர்ந்து, மனிதநேயம் வளர்ந்து, உலகம் அமைதியுடன் வாழும் சமூகத்தை உருவாக்குதல்." வேதம், ஆகமம், சித்தர் மரபு, ஸ்ரீவித்யா உபாசனை மற்றும் குருபரம்பரையின் தெய்வீக ஞானத்தைப் பாதுகாத்து, உலகம் முழுவதும் ஆன்மீக ஒளியைப் பரப்பும் மையமாக திகழ்வதே எமது தொலைநோக்கு பார்வையாகும்.

நோக்கம் (MISSION)

1. *சனாதன தர்மப் பரப்புரை:* சனாதன தர்மத்தின் உண்மையான தத்துவங்களையும், வாழ்க்கை நெறிகளையும் மக்களிடையே பரப்புதல்.
2. ஸ்ரீவித்யா மற்றும் சக்தி உபாசனை வளர்ச்சி: அன்னை பராசக்தியின் வழிபாட்டு மரபுகளை பாதுகாத்து வளர்த்தல்.
3. ஆன்மீக கல்வி மற்றும் விழிப்புணர்வு: பூஜை, ஹோமம், யாகம், உபந்யாசம், தர்ம வகுப்புகள் மற்றும் ஆன்மீகப் பயிற்சிகள் மூலம் ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்துதல்.
4. குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான தர்மக் கல்வி: அடுத்த தலைமுறையினருக்கு வேதம், இதிகாசம், புராணம், ஜோதிடம் மற்றும் பாரம்பரிய அறிவை கொண்டு சேர்த்தல்.
5. ஜோதிட மற்றும் ஆன்மீக வழிகாட்டுதல்: வேத ஜோதிடம், பிரசன்னம், வாஸ்து மற்றும் ஆன்மீக ஆலோசனைகள் மூலம் மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு உதவுதல்.
6. சமூக மற்றும் மனிதநேய சேவை: அன்னதானம், கல்வி உதவி, மருத்துவ உதவி மற்றும் சமூக நலப்பணிகளை மேற்கொள்ளுதல்.
7. குடும்ப மற்றும் பண்பாட்டு மேம்பாடு: குடும்ப ஒற்றுமை, நல்லொழுக்கம் மற்றும் பாரம்பரிய பண்பாட்டை வளர்த்தல்.
8. உலகளாவிய தர்ம இயக்கம்: சனாதன தர்மத்தின் ஒளியை உலகெங்கும் கொண்டு செல்வது.

எமது ஆன்மீக தத்துவம்

ஞானம் • வீரம் • செல்வம், இவை ஸ்ரீ இராஜபகவதி சர்வசக்தி பீடத்தின் மூன்று அடிப்படை தூண்களாகும்.

ஞானம்: இறையறிவு, ஆன்மீக விழிப்புணர்வு மற்றும் தர்ம அறிவை வளர்த்தல்.

வீரம்: உண்மை மற்றும் தர்மத்திற்காக துணிவுடன் நிற்றல்.

செல்வம்:இறையருள், ஆன்மீக வளம், குடும்ப நலம் மற்றும் சமூக முன்னேற்றத்தை உருவாக்குதல்.ஐம் • ஹ்ரீம் • ஸ்ரீம்

ஐம் – ஞானத்தின் சக்தி, ஹ்ரீம் – பராசக்தியின் சக்தி, ஸ்ரீம் – வளமும் மங்களமும் தரும் சக்தி.

ஐம் மூலம் ஞானம் பெறுவோம், ஹ்ரீம் மூலம் சக்தி பெறுவோம், ஸ்ரீம் மூலம் வளம் பெறுவோம்.

எமது முழக்கம்

ஞானத்தால் வழிநடத்தப்படுவோம், வீரத்தால் தர்மத்தைக் காப்போம், செல்வத்தால் சமூகத்திற்கு சேவை செய்வோம்

"தர்மம் காப்போம் – தர்மம் நம்மைக் காக்கும்"

ஓம் ஸ்ரீ மாத்ரே நம: 🙏

ஸ்ரீ இராஜபகவதி சர்வசக்தி பீடம்

நிறுவனர் மற்றும் முதன்மை அறங்காவலர்

ஸ்ரீ வித்யா உபாசகர் குருஜி சிவஸ்ரீ ஆதித்யானந்தா

ஸ்ரீ இராஜபகவதி சர்வசக்தி பீடம், திருச்சி

நிர்வாகக் குழு மற்றும் ஆலோசகர்கள்

தேசிய நிர்வாகம்:

திரு. பெரியண்ணன் – சேலம். (NATIONAL PRESIDENT)

பன்னாட்டு நிர்வாகம்:

தவஸ்ரீ ஆத்ம பிரக்ஞானந்த பூரி – மலேசியா.(PRESIDENT – MALAYSIA)

மூத்த ஆன்மீக ஆலோசகர்கள்:

திரு. ராஜேஷ் கண்ணா – திருச்சி. (SENIOR SPIRITUAL ADVISOR)

திருமதி. உமா – சென்னை. (SENIOR SPIRITUAL ADVISOR)

திருமதி. அட்சயாம்பா தேவி – சென்னை.(SENIOR SPIRITUAL ADVISOR)

ஆன்மீக ஆலோசகர்கள்:

திருமதி. சித்ரா. (SPIRITUAL ADVISOR)

திருமதி. பத்மஜா – கோயம்புத்தூர். (SPIRITUAL ADVISOR)

நிர்வாகப் பிரிவு:

செல்வி. பிரியா நந்தி – சென்னை. (ADMIN HEAD)

திருமதி. கார்கி மேத்தா – பெங்களூர். (OPERATIONS HEAD)

திரு. பிரவீன் – மதுரை, (OPERATIONS HEAD)

திரு. ரெங்கநாத் மேத்தா – பெங்களூர்.(STATES CO-ORDINATOR HEAD)

சட்டம் மற்றும் ஆவணப் பிரிவு:

திருமதி. பானுமதி – சென்னை. (LEGAL ADVISOR)

திரு. நித்திஸ் – திருச்சி. (LEGAL & DOCUMENTATION ADVISOR)

யோகா மற்றும் தியானப் பிரிவு:

திருமதி. மஞ்சுளாம்பா தேவி – சென்னை. (DIRECTOR OF YOGA & MEDITATION)

இளைஞர் நலப் பிரிவு:

திரு. ரோஷன் – சென்னை. (YOUTH WELFARE HEAD)

மகளிர் நலப் பிரிவு:

திருமதி. மீனாட்சி – திருச்சி. (WOMEN'S WELFARE HEAD)

நிதி மற்றும் நிர்வாகம்:

திருமதி. மகாலெட்சுமி – திருச்சி. (TREASURER)

திரு. மணி – திருச்சி. (DHARMAKARTHA)

ஊடகம் மற்றும் வெளியீட்டுப் பிரிவு:

திரு. வினோத் – திருச்சி. (CHIEF HEAD OF NEWSLETTER)

அன்னதானம் மற்றும் உணவு மேலாண்மை:

திரு. சதீஸ் – திருச்சி. (FOOD MANAGEMENT HEAD)

அன்னை ஸ்ரீ இராஜபகவதியின் அருளால், ஸ்ரீ இராஜபகவதி சர்வசக்தி பீடத்தின் ஆன்மீக, சமூக மற்றும் தர்மப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் ஆலோசகர்களின் விவரங்கள் மேற்கண்டவையாகும்.

ஓம் ஸ்ரீ மாத்ரே நமঃ 🙏

ஞான ஒளி - அருள் உரை

“சனாதன தர்மம் – உண்மையும் தவறான புரிதல்களும்”

ஓம் ஸ்ரீ மாத்ரே நம:

சனாதன தர்மம் என்பது ஒரு மதத்தின் பெயர் மட்டுமல்ல. அது மனித வாழ்க்கையை நெறிப்படுத்தும் நித்தியமான அறவழியாகும். "சனாதனம்" என்றால் என்றும் நிலைத்திருப்பது, அழியாதது என்று பொருள். "தர்மம்" என்றால் நீதியும் கடமையும் ஒழுக்கமும் ஆகும். ஆகவே, சனாதன தர்மம் என்பது காலத்தால் அழியாத அறநெறி வாழ்க்கை முறையாகும்.

வேதங்கள், உபநிஷத்துகள், இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் உருவான இந்த தர்மம், மனிதனை இறை உணர்விற்கும் ஆன்மீக உயர்விற்கும் வழிநடத்துகிறது. "உலகமே ஒரு குடும்பம்" (வசுதைவ குடும்பகம்), "அனைத்து உயிர்களும் இறைவனின் படைப்பே" என்ற உயர்ந்த சிந்தனைகளை உலகிற்கு வழங்கியது சனாதன தர்மமே.

இன்றைய காலத்தில் ஏற்பட்டுள்ள தவறான புரிதல்கள்

இன்றைய சமூக ஊடக காலத்தில், சனாதன தர்மத்தைப் பற்றிய பல தவறான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன.

1. சனாதன தர்மம் என்பது சாதியை மட்டுமே போதிக்கிறது

இது மிகப்பெரிய தவறான புரிதலாகும். வேதங்களிலும் கீதையிலும் மனிதனின் உயர்வு பிறப்பால் அல்ல, குணத்தாலும் செயல்களாலும் தீர்மானிக்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது. பின்னாளில் சமூகத்தில் தோன்றிய சில குறைபாடுகள் சனாதன தர்மத்தின் உண்மையான போதனைகள் அல்ல.

2. சனாதன தர்மம் பழமையானது, நவீன உலகிற்கு பொருந்தாது

உண்மையில் சனாதன தர்மத்தின் கோட்பாடுகள் காலத்தை கடந்தவை. இயற்கை பாதுகாப்பு, குடும்ப ஒற்றுமை, பெற்றோர் மரியாதை, உயிர்கள் மீதான கருணை, மன அமைதி போன்ற அனைத்தும் இன்றும் அவசியமானவையே.

3. பல தெய்வங்களை வணங்குவது குழப்பமானது

சனாதன தர்மம் பல கடவுள்களை அல்ல, ஒரே பரம்பொருளின் பல்வேறு அம்சங்களை வணங்குகிறது. நீர், தண்ணீர், ஜலம் என்று பெயர்கள் வேறுபட்டாலும் பொருள் ஒன்று போல, சிவன், விஷ்ணு, சக்தி, கணபதி, சூரியன் போன்ற தெய்வங்கள் பரம்பொருளின் பல்வேறு வெளிப்பாடுகளாகக் கருதப்படுகின்றன.

4. சனாதன தர்மம் சடங்குகளை மட்டுமே வலியுறுத்துகிறது

சடங்குகள் மனித மனதை ஒருமுகப்படுத்த உதவும் கருவிகள் மட்டுமே. உண்மையான சனாதன தர்மம் அன்பு, கருணை, தானம், உண்மை, பக்தி, சேவை போன்ற உயர்ந்த பண்புகளை வலியுறுத்துகிறது.

சனாதன தர்மத்தின் உண்மையான நோக்கம்

சனாதன தர்மம் மனிதனை நல்ல மனிதனாக மாற்றுவதே அதன் முதன்மை நோக்கமாகும். ஒருவர் எந்த வழிபாட்டு முறையைப் பின்பற்றினாலும், அவர் உண்மையுடனும் அன்புடனும் வாழ வேண்டும் என்பதே இதன் அடிப்படை கருத்தாகும்.

இறைவனை கோவிலில் மட்டுமல்ல, ஒவ்வொரு உயிரிலும் காண்பதே சனாதன தர்மத்தின் உயர்ந்த தத்துவம். பிறருக்கு நன்மை செய்வதும், தர்மத்தை காப்பதும், இயற்கையை மதிப்பதும், பெற்றோர்களையும் குருமார்களையும் போற்றுவதும் சனாதன வாழ்க்கை முறையின் அங்கங்களாகும்.

நிறைவுரை

சனாதன தர்மம் என்பது வெறும் மத அடையாளமல்ல; அது மனித குலத்தின் ஆன்மீக பாரம்பரியமாகும். அதை அறியாமல் விமர்சிப்பதும், தவறாக புரிந்து கொள்வதும் சமூகத்தில் குழப்பத்தை உருவாக்கும். ஆகவே, சனாதன தர்மத்தை அதன் மூல ஆதாரங்களின் வழியே அறிந்து, அதன் உயர்ந்த அறநெறிகளை வாழ்க்கையில் கடைப்பிடிப்போம்.

"தர்மோ ரக்ஷதி ரக்ஷித" – தர்மத்தைக் காப்பவன் தர்மத்தால் காக்கப்படுவான்.

ஓம் ஸ்ரீ மாத்ரே நம:

ஸ்ரீ வித்யா உபாசகர்
சிவஸ்ரீ ஆதித்யானந்தா

இந்த மாத சக்தி பீடம்

காமக்யா சக்தி பீடம் – தாந்திரீக சக்தியின் மகத்தான திருத்தலம்

இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள அசாம் மாநிலம், இயற்கை வளமும் ஆன்மீகப் பெருமையும் நிறைந்த புனித பூமியாகும். அங்கு குவஹாத்தி நகரின் அருகே நீலாசல மலை மீது வீற்றிருக்கும் காமக்யா தேவி திருக்கோவில், சக்தி வழிபாட்டில் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ள மகா சக்தி பீடங்களில் ஒன்றாக விளங்குகிறது.

சக்தி உபாசகர்கள், தாந்திரீக சாதகர்கள், யோகிகள் மற்றும் பக்தர்கள் அனைவரும் வாழ்நாளில் ஒருமுறையாவது தரிசிக்க விரும்பும் தெய்வீகத் திருத்தலமாக காமக்யா அம்மன் கோவில் போற்றப்படுகிறது.

புராண வரலாறு

தட்சன் நடத்திய யாகத்தில் அவமதிக்கப்பட்ட அன்னை சதி தேவி யாககுண்டத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். இதனால் துயருற்ற மகாதேவன், சதியின் உடலைத் தூக்கிக்கொண்டு உலகம் முழுவதும் உலா வந்தார். உலக இயக்கம் பாதிக்கப்படுவதை உணர்ந்த மகாவிஷ்ணு தனது சுதர்சன சக்கரத்தால் சதியின் உடலைப் பல துண்டுகளாகப் பிரித்தார்.

சதியின் உடல் உறுப்புகள் விழுந்த இடங்கள் அனைத்தும் சக்தி பீடங்களாக உருவாயின. காமக்யா தலத்தில் அன்னையின் யோனி பகுதி விழுந்ததாக புராணங்கள் கூறுகின்றன. இதனால் இந்தத் தலம் பெண்மை, படைப்பாற்றல், வளம் மற்றும் சக்தியின் உன்னத அடையாளமாக போற்றப்படுகிறது.

கோவிலின் தனிச்சிறப்பு

இந்தக் கோவிலில் மற்ற கோவில்களைப் போல அம்மனின் சிலை கிடையாது. கருவறைக்குள் இயற்கையாக உருவான பாறை பிளவில் எப்போதும் நீர் ஊறிக்கொண்டே இருக்கும். அந்தப் புனித வடிவமே காமக்யா தேவியாக வழிபடப்படுகிறது.
இது உலகில் அரிதாகக் காணப்படும் வழிபாட்டு முறையாகும். சக்தி என்பது உருவத்திற்கு அப்பாற்பட்ட பரம்பொருள் என்பதை உணர்த்தும் ஆன்மீகச் சின்னமாக இது கருதப்படுகிறது.

அம்புபாச்சி மேளா

காமக்யா கோவிலின் மிகப்பெரிய சிறப்பு அம்புபாச்சி மேளா ஆகும். ஆண்டுதோறும் ஆஷாட மாதத்தில் மூன்று நாட்கள் கோவில் மூடப்படும். இந்த நாட்களில் அன்னை இயற்கையான மாதவிடாய் நிலையில் இருப்பதாக பக்தர்கள் நம்புகின்றனர்.
இந்தக் காலத்தில் வழக்கமான பூஜைகள் நடைபெறாது. மூன்று நாட்களுக்குப் பிறகு சிறப்பு பூஜைகளுடன் கோவில் திறக்கப்படும். அப்போது உலகம் முழுவதிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து தரிசனம் செய்கின்றனர்.
பெண்மையின் புனிதத்தையும், தாய்மையின் மகத்துவத்தையும் போற்றும் உலகின் மிக முக்கியமான ஆன்மீக நிகழ்வுகளில் இதுவும் ஒன்றாகும்.

தாந்திரீக வழிபாட்டின் மையம்

காமக்யா தலம் தாந்திரீக சாதனைகளுக்குப் புகழ்பெற்றது. பல சித்தர்கள், யோகிகள் மற்றும் சக்தி உபாசகர்கள் இத்தலத்தில் தவம் செய்து ஆன்மீக முன்னேற்றம் பெற்றதாக கூறப்படுகிறது.
எனினும், தாந்திரீகம் என்பது சிலர் நினைப்பது போல் மந்திர, மாயாஜால வழிபாடு அல்ல. அது மனிதனின் உள்ளார்ந்த சக்தியை விழிப்புணர்வுடன் எழுப்பி, பராசக்தியுடன் ஒன்றிணைவதற்கான உயர்ந்த ஆன்மீகப் பாதையாகும்.

தலத்தில் வழிபடுவதால் கிடைக்கும் பலன்கள்

காமக்யா தேவியை பக்தியுடன் வழிபடுவதால்:
திருமணத் தடை நீங்கும், புத்திர பாக்கியம் கிடைக்கும், குடும்ப ஒற்றுமை வளரும், மன உறுதி அதிகரிக்கும், தொழில் மற்றும் வாழ்க்கை முன்னேற்றம் ஏற்படும்,
ஆன்மீக சாதனைகளில் வெற்றி கிடைக்கும். என்று பக்தர்கள் நம்புகின்றனர்.

செல்லும் வழி

காமக்யா கோவில் அசாம் மாநிலத்தின் குவஹாத்தி நகரில் அமைந்துள்ளது. குவஹாத்தி விமான நிலையம் மற்றும் இரயில் நிலையத்திலிருந்து எளிதில் சென்றடையலாம். நீலாசல மலை உச்சியில் அமைந்துள்ள இந்தத் திருத்தலம் இயற்கை அழகும் தெய்வீக அமைதியும் நிறைந்த புனிதத் தலமாக விளங்குகிறது.

நிறைவுரை

காமக்யா சக்தி பீடம் என்பது ஒரு கோவில் மட்டுமல்ல; அது அன்னையின் படைப்புச் சக்தியை உணர்த்தும் தெய்வீக மையமாகும். பெண்மையின் மகத்துவம், தாய்மையின் புனிதம் மற்றும் பராசக்தியின் பேரருளை உலகிற்கு எடுத்துரைக்கும் அரிய ஆன்மீகத் திருத்தலமாக இது திகழ்கிறது.

அன்னையின் அருள் அனைவருக்கும் கிட்டி, வாழ்வில் சகல நன்மைகளும் பெருக பிரார்த்திப்போம்.

ஓம் ஐம் ஹ்ரீம் க்லீம் காமாக்யாயை நம:

–

– திருமதி. பானுமதி, சென்னை
சட்ட ஆலோசகர் (LEGAL ADVISOR)
ஸ்ரீ இராஜபகவதி சர்வசக்தி பீடம்
சென்னை.

தர்ம பிரசாரகர் பயிலரங்கம்

தர்ம பிரசாரகர் பயிலரங்கம் – ஆனைகட்டியில் சிறப்பாக நடைபெற்றது

கோவை மாவட்டம், ஆனைகட்டி

கோவை ஆனைகட்டியில் அமைந்துள்ள ARSHA VIDYA GURUKULAM வளாகத்தில், தர்ம சிந்தனை சமிதி சார்பில், பூஜ்யஸ்ரீ சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களின் உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டு, தர்ம பிரசாரகர் பயிலரங்கம் 16.05.2026 முதல் 22.05.2026 வரை ஏழு நாட்கள் சிறப்பாக நடைபெற்றது.

இப்பயிலரங்கம் சுவாமி ஜகதாத்மானந்த சரஸ்வதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் பல்வேறு பகுதிகளிலிருந்து தர்மப் பணியாளர்கள், ஆன்மீக ஆர்வலர்கள் மற்றும் இந்து தர்மப் பிரசாரகர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இந்நிகழ்வில், குருஜி சிவஸ்ரீ ஆதித்யானந்தா அவர்கள், தர்ம சிந்தனை சமிதியின் திருச்சி மண்டலத் தலைவராக பொறுப்பேற்று கலந்து கொண்டது சிறப்பம்சமாக அமைந்தது. தர்மப் பணிகளை அடித்தட்டு மக்களிடமும், இளைய தலைமுறையினரிடமும் கொண்டு செல்லும் பல்வேறு வழிமுறைகள் குறித்து விரிவான ஆலோசனைகளும், கருத்துப் பரிமாற்றங்களும் நடைபெற்றன.

மேலும், இப்பயிலரங்கத்தின் ஒரு பகுதியாக "பாலஜோதிடம்" என்ற தலைப்பில் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன. ஜோதிட சாஸ்திரத்தின் அடிப்படை அறிவு குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கில், சிறுவர்கள் மற்றும் சிறுமிகளுக்காக எளிய முறையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.
குழந்தைகள் மிகுந்த ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் இந்தப் பயிற்சிகளில் கலந்து கொண்டு ஜோதிடத்தின் அடிப்படைக் கருத்துகளை கற்றுத் தேர்ந்தனர். எதிர்காலத்தில் சனாதன தர்மம், வேத பாரம்பரியம் மற்றும் ஜோதிட அறிவு அடுத்த தலைமுறைக்கு பரவுவதற்கு இத்தகைய பயிற்சிகள் பெரும் பங்களிப்பை வழங்கும் என்பது அனைவராலும் பாராட்டப்பட்டது.

தர்மம், ஆன்மீகம், வேத பாரம்பரியம் மற்றும் பண்பாட்டு விழிப்புணர்வை சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் கொண்டு சேர்க்கும் நோக்கில் நடைபெற்ற இந்த பயிலரங்கம், பங்கேற்ற அனைவருக்கும் மறக்க முடியாத ஆன்மீக அனுபவமாக அமைந்தது.
இவற்றை சிறப்பாக நடத்தி கொடுத்த அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றிகள்.

ஓம் ஸ்ரீ மாத்ரே நம:

ஆனி மாத இராசி பலன்கள் (2026)

(ஆனி 1 முதல் ஆனி 31 வரை)

ஆனி மாதத்தில் சூரிய பகவான் மிதுன ராசியில் சஞ்சரிப்பதாலும், கிரக நிலைகளில் ஏற்படும் மாற்றங்களாலும் சில இராசிக்காரர்களுக்கு முன்னேற்றமும் சிலருக்கு பொறுமையும் அவசியமாகிறது. குரு, சுக்கிரன், புதன் ஆகிய கிரகங்களின் சுப பார்வை பலருக்கும் நன்மைகளை வழங்கும் காலமாக அமைகிறது.

மேஷம்

இந்த மாதம் புதிய முயற்சிகளுக்கு சாதகமான காலமாகும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த காரியங்கள் நிறைவேறும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். பணவரவு சீராக இருக்கும்.

பரிகாரம்: செவ்வாய்க்கிழமைகளில் முருகப்பெருமானை வழிபடவும்.

ரிஷபம்

வருமானம் அதிகரிக்கும் வாய்ப்புகள் உண்டு. சொத்து தொடர்பான முயற்சிகள் வெற்றி பெறும். குடும்ப உறுப்பினர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் குறையும். உடல்நலத்தில் சிறிது கவனம் தேவை.

பரிகாரம்: வெள்ளிக்கிழமைகளில் மகாலட்சுமி வழிபாடு செய்யவும்.

மிதுனம்

சூரியன் உங்கள் ராசியில் இருப்பதால் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய திட்டங்கள் தொடங்கலாம். அரசு சார்ந்த காரியங்களில் சாதகமான முடிவுகள் கிடைக்கும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

பரிகாரம்:விநாயகர் வழிபாடு சிறப்பு.

கடகம்

சில காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் மூத்தவர்களின் ஆலோசனையை பின்பற்றுவது நன்மை தரும். ஆன்மீக சிந்தனைகள் அதிகரிக்கும்.

பரிகாரம்: திங்கட்கிழமைகளில் சிவபெருமானுக்கு பால் அபிஷேகம் செய்யவும்.

ஆனி மாத இராசி பலன்கள் (2026)

(ஆனி 1 முதல் ஆனி 31 வரை)

சிம்மம்

தொழில் மற்றும் வியாபாரத்தில் வளர்ச்சி காணப்படும். புதிய நண்பர்கள் மற்றும் முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். எதிர்பார்த்த பண உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உண்டு.

பரிகாரம்: ஞாயிற்றுக்கிழமைகளில் சூரிய நமஸ்காரம் செய்யவும்.

கன்னி

உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். வேலை வாய்ப்பை எதிர்பார்ப்பவர்களுக்கு நல்ல தகவல்கள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

பரிகாரம்: புதன்கிழமைகளில் விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம் செய்யவும்.

துலாம்

பொருளாதார நிலை மேம்படும். வெளிநாடு தொடர்பான முயற்சிகளில் சாதகமான முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். பழைய நண்பர்களை சந்திக்கும் வாய்ப்பு உண்டு.

பரிகாரம்: வெள்ளிக்கிழமைகளில் அம்பாள் வழிபாடு செய்யவும்.

விருச்சிகம்

பொறுமையுடன் செயல்பட வேண்டிய காலம். தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். தொழிலில் புதிய மாற்றங்கள் ஏற்படலாம். திடீர் செலவுகள் வந்தாலும் சமாளிக்கும் திறன் கிடைக்கும்.

பரிகாரம்: செவ்வாய்க்கிழமைகளில் ஸ்ரீ நரசிம்மர் அல்லது முருகன் வழிபாடு செய்யவும்.

ஆனி மாத இராசி பலன்கள் (2026)

(ஆனி 1 முதல் ஆனி 31 வரை)

தனுசு

திருமண முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கூட்டுத் தொழிலில் இருந்த பிரச்சினைகள் குறையும். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். ஆன்மீக பயணங்கள் மேற்கொள்ள வாய்ப்பு உண்டு.

பரிகாரம்: வியாழக்கிழமைகளில் தட்சிணாமூர்த்தி வழிபாடு செய்யவும்.

மகரம்

பணியிடத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். கடின உழைப்பின் மூலம் வெற்றி கிடைக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

பரிகாரம்: சனிக்கிழமைகளில் சனீஸ்வர பகவானை வழிபடவும்.

கும்பம்

கலை, கல்வி, வியாபாரம் ஆகிய துறைகளில் இருப்பவர்களுக்கு சிறந்த காலம். குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனமாக செயல்பட வேண்டும்.

பரிகாரம்: சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயர் வழிபாடு செய்யவும்.

மீனம்

குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். தொழில் மற்றும் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். தாயாரின் ஆசீர்வாதம் மற்றும் ஆதரவு கிடைக்கும்.

பரிகாரம்: வியாழக்கிழமைகளில் குரு பகவான் வழிபாடு செய்யவும்.

பொதுப் பலன்

ஆனி மாதம் ஆன்மீக வளர்ச்சி, குடும்ப ஒற்றுமை மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கு ஏற்ற மாதமாக அமைகிறது. இறைநம்பிக்கையுடன் செயல்பட்டால் பல தடைகள் விலகி நன்மைகள் பெருகும்.

"இறை அருளும், குரு அருளும் இருந்தால் கிரக தோஷங்களும் நன்மையாக மாறும்."

ஓம் ஸ்ரீ மாத்ரே நம:
ஸ்ரீ வித்யா உபாசகர்
சிவஸ்ரீ ஆதித்யானந்தா

குறிப்பு: மேற்கண்ட பலன்கள் அனைத்தும் கிரக நிலைகளை அடிப்படையாகக் கொண்ட பொதுவான இராசி பலன்கள் மட்டுமே. தனிநபரின் ஜாதக அமைப்பு, தசா-புத்தி, கோச்சார நிலை மற்றும் பிற ஜோதிட அம்சங்களின் அடிப்படையில் பலன்கள் மாறுபடலாம். துல்லியமான பலன்களை அறிய தனிப்பட்ட ஜாதக ஆலோசனையை பெறுவது சிறந்தது.

தியானம் என்றால் என்ன? ஏன் தியானம் அவசியம்?

நமஸ்தே

இது எனது கட்டுரை மற்றும் இது தொடர்ச்சியாக வரும் பகுதி ஆகும்.

மகிழ்ச்சி மற்றும் அமைதியைத் தேடும் நம்முடைய பயணத்தில், நாம் அடிக்கடி கடவுளை அல்லது பிரபஞ்சத்தை நோக்கி, நாம் விரும்பும் அனைத்தையும் வழங்குமாறு பிரார்த்திக்கிறோம். நம் பொருளாதார நலனுக்காக உதவும் என்ற நம்பிக்கையில் நாம் கோவில்களுக்கு சென்று பூஜைகள் மற்றும் சடங்குகள் செய்கிறோம். செல்வமும் முழுமையான நலமும் தேடும் தொடர்ச்சியான ஆசையால் நம் வாழ்க்கையில் இடையறாத கலக்கம் உருவாகிறது. இதனால் நம்முடைய சக்தி முழுவதும் வீணாகி, நாமே ஒரு இயந்திரம் போல வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆனால் நம்முடைய வாழ்க்கையை தியானத்தின் மூலம் மாற்றக்கூடிய சக்தி நமக்குள் இருப்பதை நாம் அறியாமல் இருக்கிறோம். வெற்றி பெற்ற பிறகும் மன அமைதி இல்லாத நிலை தொடர்கிறது. இதற்குக் காரணம் என்ன?

நாம் தொடர்ந்து எண்ணங்களால் நம் சக்தியை வீணாக்குகிறோம். அந்த சக்தியைச் சேமித்து சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். இடையறாத மன ஓட்டம் ஒரு குரங்கு போல ஒன்றிலிருந்து ஒன்றிற்கு தாவி, நம்மை கவனம் செலுத்த விடாமல் செய்கிறது. இதுவே நம்முடைய இலக்குகளை அடைய தடையாகிறது.

இதிலிருந்து விடுபட தியானம் உதவுகிறது. தியானம் என்பது மனம் மற்றும் உடலை அமைதியான நிலையில் கொண்டு வரும் ஒரு பயிற்சி. யோகம் உடலைச் சமநிலைப்படுத்துகிறது; தியானம் மனதைச் சமநிலைப்படுத்துகிறது. இவை இரண்டும் சேர்ந்து நமக்கு வாழ்க்கையில் நாம் உண்மையில் எதை அடைய விரும்புகிறோம் என்பதை தெளிவாக உணர உதவுகின்றன.

இதன் மூலம் நாம் பிரச்சினைகளை தீர்க்கவும், தெளிவான சிந்தனையைப் பெறவும் முடியும். மேலும் குழப்பமில்லாமல் சரியான முடிவுகளை எடுக்க முடியும்.

அப்படியானால் தியானத்தை எவ்வாறு தொடங்குவது?

சொல்வது எளிது; செய்வது சற்று கடினம். மனம் முழுமையாக அமைதியாக இருப்பது அரிது; அது முழுமையான சமாதி நிலையில் மட்டுமே சாத்தியம்.

அதனால் தியானத்தின் முதல் படி என்பது சில நேரம் அமைதியாக அமர்ந்து நம் விழிப்புணர்வை சுவாசத்திற்கும் எண்ணங்களுக்கும் கொண்டு செல்வதாகும்.

உடலை நேராக வைத்துக்கொண்டு, முதுகெலும்பு நேராக இருக்கும்படி வசதியான நிலையில் அமர வேண்டும். தரையில் பாயில் அல்லது நாற்காலியில் அமரலாம்; ஆனால் முதுகெலும்பு நேராக இருக்க வேண்டும்.

சில ஆழமான மூச்சுகளை எடுத்துக்கொண்டு, உங்கள் உடலுக்கும் சுவாசத்திற்கும் விழிப்புணர்வை கொண்டு வாருங்கள். குறைந்தது 7 நிமிடங்கள் உங்கள் சுவாசத்தை கவனியுங்கள். உள்ளிழுத்தலும் வெளியேற்றலும் உணருங்கள்.

முதலில் இது கடினமாக இருக்கும்; ஆனால் தினமும் முயற்சி செய்யுங்கள். பின்னர் நேரத்தை மெதுவாக அதிகரிக்கலாம்.

சுவாசத்தை கவனிப்பதன் மூலம் நீங்கள் உங்கள் எண்ணங்களை ஒரு பார்வையாளராகக் காணத் தொடங்குவீர்கள். அவற்றை உங்கள் சொந்த எண்ணங்கள் என ஈடுபடாமல், வெறும் கவனிப்பதிலேயே இருக்க வேண்டும்.

இதனால் மனம் மெதுவாக அமைதியாகும். இதை தொடர்ந்து செய்தால் ஆழ்ந்த உள் அமைதியை அடைய முடியும்.

அடுத்த கட்டுரையில் இந்த பயிற்சியை படிப்படியாக விரிவாகப் பார்ப்போம்.

தெய்வீக அன்னை அனைவருக்கும் தியானப் பயணத்தை தொடங்க அருள் புரிவாளாக.

ஸ்ரீ மாத்ரே நமஹ. 🙏

ஸ்ரீ மஞ்சுளாம்பா தேவி
இயக்குநர் (யோகா & தியானம்).
ஸ்ரீ இராஜபகவதி சர்வசக்தி பீடம்
சென்னை.

ஆனி மாத சிறப்புகள் மற்றும் விழாக்கள்

தமிழ் ஆண்டின் மூன்றாவது மாதமான ஆனி மாதம் (ஜூன் – ஜூலை) ஆன்மீக ரீதியாக மிகவும் உயர்ந்த மாதமாகக் கருதப்படுகிறது. இந்த மாதம் சிவபெருமானின் அருளைப் பெறுவதற்கும், யோக சாதனைகள், தவம், மந்திர ஜபம் மற்றும் தெய்வ வழிபாடுகளுக்கும் சிறந்த காலமாகும். ஆனி மாதம் பொதுவாக மிதுன சூரிய மாதமாக அமைந்து, கடும் வெயில் காலத்தின் இறுதிப்பகுதியைக் குறிக்கிறது.

ஆனி மாதத்தின் ஆன்மீக முக்கியத்துவம்

ஆனி மாதம் சிவபெருமானின் ஆனந்த தாண்டவத்துடன் தொடர்புடையது. இந்த மாதத்தில் பிரபஞ்ச இயக்கத்தின் அடையாளமாக விளங்கும் நடராஜப் பெருமானுக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் மற்றும் அருளல் ஆகிய பஞ்சகிரியைகளின் தத்துவத்தை நடராஜர் எடுத்துரைக்கிறார்.

மேலும், ஆனி மாதம் முடிவடையும் காலத்தில் சூரியன் தெற்குத் திசை நோக்கிய பயணத்தை (தட்சிணாயன புண்ணிய காலம்) தொடங்கும் முன் பக்தர்கள் தங்கள் ஆன்மீக முயற்சிகளை அதிகரிக்கும் காலமாக கருதப்படுகிறது.

ஆனி உத்திரம் (ஆனித் திருமஞ்சனம்)

ஆனி மாதத்தின் மிக முக்கியமான விழா ஆனி உத்திரம் அல்லது ஆனித் திருமஞ்சனம் ஆகும். உத்திர நட்சத்திரம் ஆனி மாதத்தில் வரும் நாளில் இந்த விழா கொண்டாடப்படுகிறது.

சிறப்புகள்:

நடராஜப் பெருமானுக்கு மகா அபிஷேகம் நடைபெறும்.
சிதம்பரம் நடராஜர் கோவிலில் பத்து நாள் பிரம்மோற்சவம் நடைபெறும்.
தேரோட்டம், வீதி உலா, வேதபாராயணம், யாகங்கள் நடைபெறும்.
மாணிக்கவாசகருக்கு சிவபெருமான் உபதேசம் அருளிய தினமாகவும் கருதப்படுகிறது.

ஆன்மீக பலன்:

ஆனி உத்திர தினத்தில் சிவ தரிசனம் செய்தால் பாவங்கள் நீங்கி ஞானம், முக்தி மற்றும் சிவானுபவம் கிடைக்கும் என்று சைவ ஆகமங்கள் கூறுகின்றன.

ஆனி மாதத்தில் அனுஷ்டிக்க வேண்டிய வழிபாடுகள்

சிவ வழிபாடு

தினமும் "ஓம் நமசிவாய" ஜபம், பிரதோஷ விரதம், ருத்ராபிஷேகம், பஞ்சாட்சர மந்திர ஜபம்.

சக்தி வழிபாடு

ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் பாராயணம், திரிபுரசுந்தரி உபாசனை, துர்க்கை மற்றும் காளி வழிபாடு.

முருக வழிபாடு

சஷ்டி விரதம், கந்த சஷ்டி கவசம் பாராயணம்.

ஆனி மாதத்தில் வரும் முக்கிய நாட்கள்

ஆனி உத்திரம் (ஆனித் திருமஞ்சனம்), ஏகாதசி விரதங்கள், பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, சங்கடஹர சதுர்த்தி, சஷ்டி விரதம்

ஆனி மாதத்தின் தத்துவம்

ஆனி மாதம் வெளிப்புற வெப்பத்தின் உச்ச நிலையைக் குறித்தாலும், ஆன்மாவின் உள்ஒளி விழித்தெழும் காலமாக கருதப்படுகிறது. நடராஜரின் ஆனந்த தாண்டவம் பிரபஞ்ச இயக்கத்தின் ரகசியத்தை உணர்த்துகிறது. இந்த மாதம் பக்தர்களுக்கு:

ஞானம், தன்னம்பிக்கை, ஆன்மீக முன்னேற்றம், குரு அருள், சிவானுபவம் ஆகியவற்றை அளிக்கும் புண்ணிய காலமாக போற்றப்படுகிறது.

ஞான ஒளி சிறப்புரை

"ஆனி மாதம் என்பது வெறும் கால மாற்றமல்ல; அது ஆன்மாவின் விழிப்புணர்விற்கான அழைப்பாகும். நடராஜரின் ஆனந்த தாண்டவம் நம் உள்ளத்தில் உள்ள அறியாமை இருளை அகற்றி ஞான ஒளியை ஏற்றுகிறது. இந்த ஆனி மாதத்தில் சிவசக்தியின் அருளால் உலக நன்மை, ஆன்மீக உயர்வு மற்றும் தர்ம வளர்ச்சி அனைவருக்கும் கிட்ட இறைவனைப் பிரார்த்திப்போம்."

ஓம் நமசிவாய!
ஓம் ஸ்ரீ மாத்ரே நம! 🙏

நமது ஸ்ரீ இராஜபகவதி அம்பாள் கோவில் கட்டுவதற்கான சங்கல்பம் வேண்டி சென்ற யாத்திரை

குக்கே சுப்பிரமணிய கோவில் கர்நாடகா

கொல்லூர் மூகாம்பிகை கோயில்

உடுப்பி கிருஷ்ணர் கோயில்



திருவிடைமருதூர், திருக்கடையூர், திருவெண்காடு ஸ்தலங்கள்

பெங்களூரில் நடைபெற்ற தன்வந்திரி மற்றும் மிருத்யுஜெய ஹோமம்

ருத்ர ஹோமம் - மே 19, 2026 - ஸ்ரீ விசாலாட்சி சமேத ஸ்ரீ காசி விஸ்வநாதர் - திருச்சி

திலஹோமம்

அன்னதான நிகழ்வுகள்


SRI RAJABHAGAWATHI
SARVASAKTHI PEETAM – TRICHY
Ancient Wisdom • Divine Guidance • Spiritual Empowerment
PROFESSIONAL TRAINING PROGRAMS
Astrology | Vastu | Kerala Sozhi Prasanam
COURSES OFFERED
Vedic Astrology (Advanced & Practical)
Vastu Shastra (Scientific & Traditional Methods)
Kerala Sozhi Prasanam (Divine Prediction System)
Prasanna Astrology Techniques
Pariharam & Spiritual Remedies
WHY CHOOSE US
17+ Years of Experience
Traditional Guru Parampara Methods
Direct & Online Classes Available
Practical Training with Real Case Studies
Certificate Provided
GURUJI SHIVASREE ADITHYAANANDHA
+91 95145 66369
LIMITED SEATS - ENROLL NOW
SRIVIDHYA UPASAKAR • SHIVASREE ADITHYANANDHA • TRICHY

SRI NIVI
POOJA PRODUCTS
SRI NIVI POOJA
PRODUCTS
TRICHY
For Order Contact
9344868255,
Deepam Oil
MRP - Rs.250/-,
Ghee MRP -
Rs.800/-
& Gingelly Oil
MRP - Rs.320/-
AVAILABLE DEEPAM OIL PRODUCTS
Pancha Deepam Oil | Ghee | Gingelly Oil
CONSUMER PACKS (RETAIL)
Ideal for household puja and individual use
100 ml – Pet Bottle Pack
200 ml – Standard Home Pack
500 ml – Monthly Value Pack
ECONOMY & BULK PACKS (WHOLESALE)
Designed for temples, large families, and resellers
1 Ltr – Refill Roftle
5 Ltr – Family/Temple Jerry Can
Commercial Tin – Bulk Wholesale Supply (Max Savings)
FOR ORDER & INQUIRIES, CONTACT US IMMEDIATELY
+91 93448 68255


WISDOM · COURAGE · PROSPERITY
NUMBER CAN MAKE
YOU A STAR
CONNECTING THE DOTS OF DESTINY THROUGH NUMEROLOGY
HEALTH
WEALTH
PROFESSION
LUCKY, UNLUCKY NUMBERS
MOBILE NUMBER ANALYSIS
LUCKY MOBILE NUMBER
NAME ANALYSIS
NAME CORRECTION
HOUSE & CAR NUMBER
BABY NAME SUGGESTIONS
BUSINESS NAME
NUMEROLOGY
The Science of Numbers
STAY TUNE
GURUJI
SHIVASREE ADITHYAANANDHA
Sri Rajabhagawathi Sarvasakthi Peetam
Trichy
Contact: 9514566369

திருச்சியின் மையப்பகுதியில்
உலகத்தரமான சிறப்பம்சங்களுடன்
1st
TRICHY'S
FIRST & BEST
PRESTIGIOUS
HOUSING PROJECT
RERA APPROVED
DTCP APPROVED
MEMBER CREDAI TIRUCHIRAPPALLI
Amazing Amenities in
Prime Location
GATEWAY TO
LUXURY LIVING
@ TRICHY
Wisteria Bloom
PREMIUM LIFESTYLE APARTMENTS
WISTERIA BLOOM
HANDING OVER SOON
HANDING OVER Soon
ALL AMENITIES WITH QUALITY AND LUXURY FINISH
OUR BEST PRICE
₹12000/-
Per sqft
LIMITED FLATS FOR LIMITED PERIOD
NEARBY
FLAT MARKET PRICE
₹15000/-
WITHOUT ANY AMENITIES
ஏன்?
Wisteria-வில்
வீடு
வாங்கணும்
எல்லா வயதினர்களுக்குமான எல்லா வசதிகளும் கொண்டது
நகரத்தின் மையப்பகுதியான தில்லைநகர், சாஸ்திரி ரோட்டில் அமைந்துள்ளது
அனைத்து முன்னணி ஷோரூம்கள், நிறுவனங்கள் @ Your Door step
OUR MODERN AMENITIES
Super Market
Multi Purpose Hall
Children's Indoor Games
Mini Theatre
Shuttle Court 2 Nos
EV points for all Car Parking
Swimming Pool
Gym
Yoga
Cricket Turf Court
Walking Track
Children's Outdoor Play Area
வாழ்வதற்கு ஏற்ற நகரில் வசதியுடன் வாழ, உங்களுக்கான FLAT "WISTERIA BLOOM APARTMENTS"
3 LUXURY HOUSING TOWERS
2 CLUB HOUSE TOWERS
100 SPACIOUS APARTMENTS
2BHK | 3BHK | 4BHK
FOUR SIDE INDIVIDUAL WALL LIKE INDIVIDUAL HOUSE
*Conditions apply
98948 50000 | 94897 50000 | Annamalai Nagar, Malar Salai, Trichy. www.wisteriadevelopers.com | gm@wisteriadevelopers.com | Follow Us